IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 217/2023 P.W. 1/L.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | தங்க லீலா | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ.அப்பாவு | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20.11.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர்படுத்தப்பட்டார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் வேலை எதுவும் பார்க்கவில்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். எனக்கு திருமணமாகவில்லை. நான் எனது அம்மாவுடன் குடியிருந்து வருகிறேன். 14.05.2022 ம் தேதி காலை 11.00 மணியளவில் வடக்கு பாலத்திற்கு நான் குளிப்பதற்காக சென்றிருந்தேன். எனது அம்மா படுத்தபடுக்கையாக இருப்பதால் அவருடைய துணிகளை துவைப்பதற்காகவும் நான் எடுத்துச்சென்றேன்.

2. அப்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் என் பின்னால் வந்து என்னை வாய்கால் பக்கம் இழுத்துச் சென்று எனது துணிகளை களைந்து உன்னை மோசமாக்கிவிடுவேன் என்று கூறினார். நான் அவ்வாறு செய்யமுடியாது என்று கூறினேன். அதற்கு அவன் கத்தியை வைத்து எனது கழுத்தை அறுப்பது போல் அறுக்க வந்தான். அப்போது எனது தம்பி மனைவி றோசிலி , ஜெபகிருபா ஆகியோர் வந்தவுடன் குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னை விட்டுவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

3. சம்பவம் சம்மந்தமாக நான் புகார் மனுக்கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள இடது கைபெருவிரல் ரேகை என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

எனக்கு எழுதப்படிக்க தெரியாது. யாராவது சொல்லிக் கொடுத்தால் அதுபோல் சொல்லுவேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த பிறகு நேரடியாக காவல்நிலையம் தான் சென்றோம் என்றால் சரிதான். அங்கு வைத்து தான் பெட்டிசன் எழுதினோம் என்றால் சரிதான். வீட்டிற்கும் வந்தார்கள். அந்த பெட்டிசனை எழுதியது போலீசார் என்றால் ஆமாம்.

2. நான் மருத்துவமனைக்கு எதுவும் செல்லவில்லை. காவல்நிலையத்திற்கு செல்லும் வரையிலும் சம்பவத்தில் ஈடுபட்ட நபர், பெயர் விவரம் எனக்குதெரியாது என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை, நான் பொய் சொல்லவில்லை. போலீசார் சொல்லிக்கொடுத்ததை தான் சொன்னேன் என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 217/2023 P.W. 2/L.W. 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. றோசிலி | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. தங்கராஜ் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20.11.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர்படுத்தப்பட்டார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லதரசியாக இருந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். அ.சா1 என்னுடைய அண்ணி. எனது மாமி படுத்த படுக்கையாக இருப்பதால் அவரது துணிகளை துவைப்பதற்காக வாய்காலுக்கு 14.05.2022 ம் தேதி அன்று காலை 10.00 மணிக்கு எனது அண்ணி துணிகளை துவைப்பதற்காக வாய்காலுக்கு சென்றிருந்தபோது நானும் வாய்காலுக்கு துணி துவைப்பதற்காக சென்றிருந்தேன். அப்போது எனது அண்ணியின் சத்தம் கேட்டது.

2. எனது அண்ணியை நான் சென்று பார்த்தபோது குற்றம் சுமத்தப்பட்ட நபர் அங்கிருந்துச் சென்றார். எனது அண்ணியின் துணிகள் கலைக்கப்பட்டிருந்தது. உதடுகள் கிழிந்திருந்தது. எனது கொழுந்தன் மனைவி கிருபா என்பவரும் என்னுடன் வந்திருந்தார். அதன் பிறகு சம்பவம் சம்மந்தமாக காவல்நிலையத்தில் அ.சா1 எனது அண்ணி புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

போலீசார் விசாரணையின் போது அ.சா1 எனது அண்ணி என்ற விவரத்தை நான் சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவதினத்தன்று நான் என் வீட்டில் இருந்தேன் என்று சொன்னால் சரிதான். என் வீடு இருக்ககூடிய இடம் வாணியக்குடி அருகில் இருக்கும் ராவிளை என்றால் சரிதான். அ.சா1ன் வீட்டிற்கும் என் வீட்டிற்கும் இடையே 500 மீட்டர் தொலைவு இருக்குமா என்றால் இல்லை, அருகில் தான் உள்ளது.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று அ.சா1 தனியாக தான் குளிக்கப்போனார் என்றால் சரிதான். அன்றையதினம் நிறைய பேர் அங்கு குளித்துக்கொண்டிருந்தார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது. நான் செல்லும்போது சம்பவத்தில் ஈடுபட்ட நபர் அங்கிருந்து சென்றுவிட்டார் என்றால் எங்களைப் பார்த்தவுடன் தான் சென்றார். மேற்படி நான் பார்த்த சமயத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் விவரம் எனக்குத் தெரியாது என்றால் இவர் தான் அந்த நபர், சாட்சி குற்றம் சுமத்தப்பட்ட நபரை அடையாளம் காண்பித்து சொல்கிறார். நாங்கள் விசாரித்தோம்.

3. நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்றோம். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றாலும், இந்த வழக்கில் சம்மந்தமில்லாத நபரை சம்மந்தப்படுத்தி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை, நான்பார்த்தேன்.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 217/2023 P.W. 3/L.W.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. ஜெபகிருபா | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. ஜாண்சன் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20.11.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர்படுத்தப்பட்டார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லதரசியாக இருந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். அ.சா1 என் கணவரின் அக்கா, எனக்கு அண்ணி முறை. அ.சா2 எனது கணவரின் அண்ணன் மனைவி. அ.சா1ன் தாயார் உடல்நிலை சரியில்லாமல் இருந்து வருகிறார். அவருடைய துணிகளை பம்புரி வாய்காலுக்கு செல்வது வழக்கம். நாங்களும் அதே வாய்காலில் சென்று துணிகளை துவைப்போம். 14.05.2022 ம் தேதி காலை 10.00 மணியளவில் எனது அண்ணி துணிகளை துவைப்பதற்காக பாம்புரி வாய்காலுக்கு சென்றிருந்தார்.

2. நாங்கள் அவரிடம் நீங்கள் முன்னாடி செல்லுங்கள், நானும் அ.சா2ம் அதன்பிறகு வருகிறோம் என்று கூறினோம். அ.சா1 துணிகளை துவைப்பதற்காக முதலில் சென்றார். நாங்களும் அதன்பிறகு சிறிது நேரம் கழித்து வாய்காலுக்குச் சென்றோம். அப்போது அ.சா1ன் சத்தம் கேட்டது. நாங்கள் அ.சா1ன் சத்தம் ஏன் இவ்வாறு கேட்கிறது என்று பார்த்து நாங்கள் சென்றபோது குற்றம் சுமத்தப்பட்ட நபர் அங்கிருந்து ஓடினார். நாங்கள் அ.சா1ன் அருகில் சென்றுப் பார்த்தபோது அவர் உடம்பில் துணிகள் அகற்றப்பட்டிருந்தது.

3. உடம்பிலும் காயங்கள் இருந்தது. நாங்கள் அவர்களிடம் நடந்த சம்பவம் குறித்து கேட்டோம். அதன் பிறகு அவர்கள் சம்பவம் சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் மனுக்கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

தங்க லீலா, றோசிலி நான் உறவினர்கள் என்றால் சரிதான். அ.சா.1 எனது அண்ணி ஆவார். அ.சா2 எனது அத்தானின் மனைவி. சம்பவம் நடைபெற்றதாக சொன்ன இடம் எந்தயிடம் என்று எனக்கு உறுதியாக தெரியாது என்றால் இல்லை, நான் சொன்ன இடம் தான். உப்பளம் எடுக்கும் இடத்திற்கு அருகில் தான் சம்பவயிடம். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், நானும் அ.சா2 றோசிலியும் உறவினர்கள் என்பதால் அ.சா1க்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.